பூவிருந்தவல்லி நகராட்சி
நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06.06.2023 செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு பூவிருந்தவல்லி நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகரமன்ற சாதாரணக் கூட்டப் பொருள் நடவடிக்கை விவரம்

குறள் : பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

------

பொருள் எண்.1

பூவிருந்தவல்லி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரர் அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 24.08.2022ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.38553/2022/EA2-SWM-7, நாள்.10.01.2023ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணிக்கு 24.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப தகுதிக்கான கூர்ந்தாய்வு செய்யப்பட்டு 11.04.2023 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில் M/s.Triad Infratech நிறுவனம் ரூ.71224609/– ஒப்பந்த தொகையாக வழங்கியுள்ளார்கள். அதனை தொடர்ந்து ஒப்பந்ததொகையினை குறைத்து கொடுக்க 11.04.2023 அன்று அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டு பெறப்பட்ட குறைந்த விலைவிகிதத்திற்கான ஒப்புநோக்கு பட்டியலை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திரு / திருவாளர் | ஒப்பந்த விகிதம் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | பூவிருந்தவல்லி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்தம் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளுதல் | 716.68 | M/s.Triad Infratech, Maraimalai Nagar, Chennai - 603209 | 0.21% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | | M/s.Green Warrior, Manavalan Nagar, Thiruvallur - 602002 | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை |
| | | | M/s.City clean, Thousan lights, Chennai - 600002 | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை |

அலுவலக குறிப்பு:-

1. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.217/2023/எச்1)



Scanned with OKEN Scanner

பொருள் எண்.2

பூவிருந்தவல்லி நகராட்சி பொதுநிதியின்கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள 18.04.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திரு/திருவாளர் | ஒப்பந்த விகிதம் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | கண்ணம்புள்ளி செட்டி தெருவில் விடுபட்ட பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல். | 9.90 | ரா.ராமன் | 0.17% குறைவு |
| | | | அமியமு எண்டர்பிரைசஸ் | 0.45% அதிகம் |
| 2 | தர்மராஜா கோயில் குறுக்குத் தெருவிற்கு மழைநீர் கால்வாய் மற்றும் குடிநீர் விநியோக குழாய் அமைக்கும் பணி | 9.80 | ஆரோக்கியநாதன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.04% குறைவு |
| | | | எம்.கார்த்திக் | 0.41% அதிகம் |
| 3 | மல்லிமா நகர் மற்றும் படவேட்டம்மன் கோயில் தெருவிற்கு ஆர்.சி.சி. சிறுபாலம் அமைத்தல் | 6.00 | அ.அனந்தசயனம் | 0.21% குறைவு |
| | | | கே.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.57% அதிகம் |
| 4 | வார்டு எண்.4 காவேரி நகர் பகுதியில் கைப்பம்ப் அமைத்தல் | 0.70 | DRS எண்டர்பிரைசஸ் | 0.06% குறைவு |
| | | | அமியமு எண்டர்பிரைசஸ் | 0.17% அதிகம் |
| 5 | பலராமன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.40 | DRS எண்டர்பிரைசஸ் | 0.09% குறைவு |
| | | | அமியமு எண்டர்பிரைசஸ் | 0.23% அதிகம் |
| 6 | அம்பாள் சிட்டி பகுதியில் புதிய குடிநீர் குழாய் அமைத்தல் | 4.00 | அமியமு எண்டர்பிரைசஸ் | 5.95% குறைவு |
| | | | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | 1.50% அதிகம் |
| 7 | வார்டு எண்.20 இந்திராணி நகர் பகுதிகளில் கல்வெட்டு மற்றும் கால்வாய் அமைத்தல். | 9.00 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.06% குறைவு |
| | | | அமியமு எண்டர்பிரைசஸ் | 0.07% அதிகம் |
| 8 | வார்டு எண்.11 வசந்தபுரி பேஸ்-2 பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 9.20 | அ.அனந்தசயனம் | 0.17% குறைவு |
| | | | கே.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.41% அதிகம் |

அலுவலக குறிப்பு

பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்.

(ந.க.எண்.2817/2022/இ1)

Scanned with OKEN Scanner

**பொருள் எண்.3**

பூவிருந்தவல்லி நகராட்சி 15வது மத்திய நிதிக்குழும திட்டம் 2022–23ன்கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள 18.04.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திரு/திருவாளர் | ஒப்பந்த விகிதம் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மோகனா நகர் மெயின்ரோடு, அம்மன் கோயில் முதல் தெரு மற்றும் ஜேம்ஸ் 5வது தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல் பணி | 20.00 | கே.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.90% அதிகம் |
| | | | அ.அனந்தசயனம் | 1.10% குறைவு |
| | | | எம்.கார்த்திக் | அசல் வரைவு காசோலை சமர்ப்பிக்கவில்லை |
| 2 | உப்புகொல்லைத் தெரு, விநாயகர் நகர் தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல் பணி | 20.00 | ஆரோக்கியநாதன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 1.49% குறைவு |
| | | | எம்.கார்த்திக் | 4.89% அதிகம் |
| 3 | ஜாகீர் உசேன் 2வது தெரு, பக்கிங்காம் சாலை தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல் பணி | 20.00 | அ.அனந்தசயனம் | 0.06% குறைவு |
| | | | அமியமு எண்டர்பிரைசஸ் | 4.88% அதிகம் |
| 4 | ஓம் மகாலட்சுமி நகர் 1வது தெரு, ஓம் மகாலட்சுமி நகர் 2வது தெரு, ருக்மணி நகர் 2வது தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல் பணி | 14.00 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.53% குறைவு |
| | | | அமியமு எண்டர்பிரைசஸ் | 0.41% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.605/2023/இ1)

**பொருள் எண்.4**

பூவிருந்தவல்லி நகராட்சி நமக்கு நாமே திட்டம் 2022–23ன்கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள 18.04.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திரு / திருவாளர் | ஒப்பந்த விகிதம் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | கோல்டன் ஹோம்ஸ் பூங்காவில் மின்விளக்குகள் மற்றும் பவுன்டைன் அமைக்கும் பணி | 7.20 | Klenz Incorporation | 0.34% அதிகம் |
| | | | Mithra Associate | 0.17%குறைவு |

**அலுவலக குறிப்பு:-**

1. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1416/2021/இ1)



Scanned with OKEN Scanner

**பொருள் எண்.5**

பூவிருந்தவல்லி நகராட்சியின் வார்டு எண்.12 இலட்சுமிபுரம் நியாயவிலைக் கடை முதல் பிள்ளையார் கோயில் வரை அமைக்கப்பட்டுள்ள மழைநீர் கால்வாய்க்கு மேல்மூடி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு:-**

1. மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 557/2022/இ1)

**பொருள் எண்.6**

பூவிருந்தவல்லி நகராட்சியின் குடிநீர் விநியோகத்திற்கு முக்கிய நீராந்தாரங்களாக பயன்படுத்தப்பட்டு வரும் 135 ஆழ்துளை குழாய் கிணறுகளில் மின்விசைப்பம்புகள் பொருத்தி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் வாயிலாகவும் மற்றும் நேரடியாகவும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட 135 எண்ணிக்கை மின்விசை மோட்டார் பம்புகள், 10 எண்ணிக்கை கூடுதல் கையிருப்பு மோட்டார் பம்புகள் மற்றும் மழைக்காலங்களில் மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் மழைநீரை வெளியேற்ற பயன்படுத்தப்பட்டு வரும் 25 எண்ணிக்கை மின்விசை மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுதுளை தனியார் வசம் ஒப்படைப்பு செய்து பழுதுநீக்கம் மற்றும் ஆண்டு பராமரிப்பு செய்திடவும் (01.06.2023 முதல் ஓராண்டிற்கு) அதற்கான தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2841 /2020/இ1)

**பொருள் எண்.7**

பூவிருந்தவல்லி நகராட்சியில் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.no | Name of work | Expenditure Amount Rs. |
|---|---|---|
| 1 | Engaging of Tractor on hire basis for dewatering diesel enginge pumpsets for flood restoration works | 986940 |
| 2 | Providing Patch work with GSB and Wetmix for Poonamallee municipal limits | 988006 |
| 3 | Engaging of 110HP Pumpset on hire basis for flood dewatering work at Amma nagar in ward 9 | 917128 |
| 4 | Supply and delivery of open well submersible motor 1HP panel board and flood restoration materials | 969606 |

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 1708/2022/இ1)



Scanned with OKEN Scanner

பொருள் எண்.8

பூவிருந்தவல்லி நகராட்சியின் பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையின் புறவழிச்சாலையில் ஏற்கனவே இருந்த பொதுகழிப்பறையை சாலை விரிவாக்கத்தின் போது இடிக்கப்பட்டு விட்டதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே பேருந்து நிறுத்தத்திற்கு நிற்கும் பொதுமக்களுக்கு அடிப்படை தேவையான கழிவறை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 557/2022/இ1)

பொருள் எண்.9

பூவிருந்தவல்லி நகராட்சி நமக்கு நாமே திட்டம் 2021–22ன்கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள 20.04.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திரு / திருவாளர் | ஒப்பந்த விகிதம் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.1 முதல் 17 வரை மற்றும் 19 முதல் 21 வரை கண்காணிப்பு கேமிரா பொருத்தும் பணி | 85.00 | ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் | 39.00% அதிகம் |
| | | | Noble Business INC | 0.25% குறைவு |

அலுவலக குறிப்பு:-

1. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்றத்தின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1416/2021/இ1)



Scanned with OKEN Scanner

**பொருள் எண்.10**

பூவிருந்தவல்லி நகராட்சி பொதுநிதி 2022–23ன்கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள 18.04.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திரு / திருவாளா் | ஒப்பந்த விகிதம் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வாா்டு எண்.6 உப்புக் கொல்லை தெருவிற்கு (பகுதி) தாா்தளம் அமைத்தல். | 17.10 | ஆரோக்கியநாதன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 2.73% குறைவு |
| | | | எம்.காா்த்திக் | 0.95% குறைவு |

**அலுவலக குறிப்பு:-**

பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.557/2023/இ1)

**பொருள் எண்.11**

பூவிருந்தவல்லி நகராட்சி நமக்கு நாமே திட்டம் 2022–23ன்கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள 11.04.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பாா்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திரு / திருவாளா் | ஒப்பந்த விகிதம் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி பகுதிகளில் குளோரினேஷன் கூடம் மற்றும் குளோரினேஷன் மோட்டாா் அமைக்கும் பணி. | 29.50 | ஸ்ரீ ராஜ கணபதி இன்ஜினியரிங் ஒா்க்ஸ் | 0.02% குறைவு |
| | | | ஸ்ரீ சபாி இன்ஜினியாிங் | 2.50% அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்றத்தின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1416/2021/இ1)

Scanned with OKEN Scanner

**பொருள் எண்.12**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கோல்டன் ஹோம்ஸ் பூங்காவில் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியை கண்காணிப்பு அலுவலர், சட்டமன்ற உறுப்பினர், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் மண்டல செயற்பொறியாளர், நகர்மன்ற தலைவர் ஆகியோரது ஆய்வின்போது பூங்காவின் நடைபாதைக்கு நடுவே அமைந்துள்ள இடத்தில் 33 கிலோ வாட்ஸ் உயர் அழுத்த மின்கம்பங்கள் உள்ளதை அப்புறப்படுத்தி நடைபாதை அமைக்குமாறு அறிவுறுத்தினார்கள். அதன்படி மேற்படி மின்கம்பங்களை அப்புறப்படுத்த தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து ரூ.11,53,907/– கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 557/2022/இ1)

**பொருள் எண்.13**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 20452/2020/LA3, நாள்.10.11.2020–ன் உத்தரவின்படி 15வது மத்திய நிதிக்குழும மான்யம் 2020–21 திட்டத்தின்கீழ் பூவிருந்தவல்லி நகராட்சிக்கு வார்டு எண்.6 கோபாலபுரம் பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து பிராடீஸ் சாலை உள்ள 7LL OHT மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது அப்பகுதியில் நீராதாரம் குறைவாக உள்ளதால் அப்பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தால் குறைவான குடிநீரே வரும் என்பதனால், அருகில் உள்ள பகுதிகளில் நீரோட்டம் நீரியல் வல்லுநர் மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் வார்டு எண்.16ல் உள்ள பிராடீஸ் சாலையில் நீரோட்டம் உள்ளதாக அறியப்பட்டுள்ளது. எனவே பிராடீஸ் சாலையில் ஆழ்துளைக் கிணறு அமைத்து அதே பிராடீஸ் சாலையில் உள்ள OHT மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்டப்பணி என்பதால், பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் ./2022/இ1)

Scanned with OKEN Scanner

**பொருள் எண்.14**

பூவிருந்தவல்லி நகராட்சி 15வது மத்திய நிதிக்குழும திட்டம் (Tied) 2022–23ன்கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள 18.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை தொடர்ந்து M/s. VEE VEE Motors நிறுவனம் மதிப்பீட்டை விட குறைத்து வழங்கிய Negotiation கடிதத்தின் படி தயாரித்த ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திரு / திருவாளர் | ஒப்பந்த விகிதம் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான இலகுரக வாகனம் 10 எண்ணிக்கை (Light Commercial vehicle) கொள்முதல் செய்தல் | 73.00 | M/s. VEE VEE Motors | 0.07% குறைவு |
| | | | M/s. Alagambal Coach Builders | 0.68% அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.605/2023/எச்1)**

**பொருள் எண்.15**

பூவிருந்தவல்லி நகராட்சி 15வது மத்திய நிதிக்குழும திட்டம் (Tied) 2022–23ன்கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள 18.04.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திரு / திருவாளர் | ஒப்பந்த விகிதம் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | பூவிருந்தவல்லி நகராட்சிக்கு 20 எண்ணிக்கையில் Battery Operated Vehicle கொள்முதல் செய்திடும் பணி | 40.00 | M/s.Siva steel works | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை |
| | | | M/s.P R and Co | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை |
| | | | M/s.Sri Venkateshwara Steel Furniture Industries | 5.29% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | | M/s. Sri Kumaran Industries | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை |
| | | | M/s. S R.Enterprises | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை |
| | | | M/s Priyam Industries and Engineering Pvt Ltd | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை |

**அலுவலக குறிப்பு:-**

1. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.605/2023/எச்1)**



Scanned with OKEN Scanner

**பொருள் எண்.16**

பூவிருந்தவல்லி நகராட்சியின் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் TN20CW – 6257 பதிவெண் கொண்ட வாகனத்திற்கு வருடாந்திர தகுதிச்சான்று பெறும்பொருட்டு பழுதுபார்ப்பு பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீடு ரூ.2.50இலட்சத்திற்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.557/2022/இ1)

**பொருள் எண்.17**

பூவிருந்தவல்லி நகராட்சியானது சென்னை மாநகராட்சியை ஒட்டி வளர்ந்து வரும் நகரமாகும். இந்நகராட்சி 6.07 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் 21 வார்டுகளை கொண்டதாகும். தற்போது இந்நகராட்சியின் மக்கள் தொகை சுமார் 74625 க்கு மேல் உள்ளது. இந்நகராட்சி பகுதிக்கு வந்து செல்வோர் எண்ணிக்கை சுமார் 75000 க்கு மேல் ஆகும்.

தற்போது 2021ம் ஆண்டு பெய்த வடகிழக்கு பருவமழையின் போது காலிமனைகளில் இருந்து அடித்து வரப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள், கட்டிட கட்டுமான கழிவுகள் மற்றும் தெருக்களிலிருந்து மழைநீர் வடிகால்வாய்களை அடைத்து கொண்டிருக்கும் பிளாஸ்டிக் தாவரக் கழிவுகள் மற்றும் காய்ந்த மரத்தின் பாகங்கள் போன்றவற்றை அகற்ற வேண்டிய அவசியமானதாலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை வழிகாட்டுதல் ந.க.எண்.26850/2021/இ1, நாள்.12.11.2021 ன்படி மேற்படி தேக்கமடைந்த பயனற்ற குப்பைகளை பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உடனடியாக அகற்ற வேண்டியதின் அவசியமானதால் பாரிவாக்கம் பகுதியில் கொட்டி வைக்கப்பட்டுள்ள குப்பைகளை செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்களத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொளத்தூர் (ஆப்பூர்) பகுதிக்கு வாகனங்கள் மூலம் கொண்டு செல்வதற்கு தோராய செலவின தொகை ரூ.9.90 இலட்சத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1029/2022/எச்1)

**பொருள் எண்.18**

பூவிருந்தவல்லி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை சேகரித்து வைத்து பிரிக்க இந்நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கு ஏதும் இல்லாத காரணத்தால் உரம் தயாரிக்க அனுப்பியது போக மீதமுள்ள குப்பைகளை அதாவது பிரிக்க இயலாத கழிவுகளை உடனுக்குடன் தனியார் வாகனம் மூலம் (இந்நகராட்சியில் போதுமான வாகனங்கள் இல்லாத காரணத்தினால்) அப்புறப்படுத்த செங்கல்பட்டு மாவட்ட காட்டாங்களத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொளத்தூர் (ஆப்பூர்) பகுதிக்கு கொண்டு செல்வதற்கு தோராய செலவின தொகை ரூ.9.80 இலட்சத்தினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1012/2022/எச்)



Scanned with OKEN Scanner

**பொருள் எண்.19**

இந்நகராட்சிக்கு சொந்தமான பூவிருந்தவல்லி அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக கடை எண்.12–க்கு (01.12.2020 முதல் 31.11.2024 வரை ) வாடகை தொகை முழுவதும் செலுத்தாமல் திரு.விமல்குமார் என்பவர் நிலுவை வைத்துள்ளார்கள். இந்நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படா வண்ணம் மேற்படி கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது குத்தகைதாரர் தொகையை செலுத்த முன்வரவில்லை. எனவே கடையின் நகராட்சியால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி கடை எண்.12ஐ ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3795 /2021 / அ1

**பொருள் எண்.20**

அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக கடைகளுக்கு வாடகை தொகை செலுத்தாமல் உள்ள கடைதாரர்களுக்கு நிலுவை தொகை முழுவதும் செலுத்த கோரி சட்டபூர்வமான நோட்டீஸ் வழக்கறிஞர் மூலம் அனுப்பபட்டும் இதுநாள் வரை நிலுவை தொகை எவரும் செலுத்தப்படாததால் மேற்படி நிலுவை குத்தகைதாரர்கள் மீது இந்நகராட்சி சார்பாக பூவிருந்தவல்லி முதன்மை மாவட்ட முனிசீப் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கினை நகராட்சியின் சார்பாக ஏற்று நடத்தும் திருமதி.பி..இவ்லின் ஜெபசெல்வி, வழக்கறிஞருக்கு கட்டணம் Filing Expenses Legal Notice செலவு மற்றும் Court Fees ஆகிய செலவினங்களுக்கு கூடுதல் செலவீனம் ரூ.13,000/– மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையினை பொதுநிதியிலிருந்து வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1876/அ1/2022

**பொருள் எண்.21**

இந்நகராட்சிக்கு சொந்தமான பூவிருந்தவல்லி அண்ணா பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள 9 கடைகள் மற்றும் குத்தகை இனங்கள் 1. நவீன கட்டண கழிப்பிட கட்டணம், 2. பேருந்துநிலைய நுழைவு கட்டணம், 3. ஆடு அடிக்கும் கட்டணம், 4. சமுதாய கூடம் வார்டு எண்(21) ஆகிய இனங்களுக்கு பலமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இதுநாள் வரையில் எவரும் மேற்படி குத்தகை இனங்களை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. எனவே நகராட்சியின் நிதியிழப்பை கருத்தில் கொண்டு மேற்படி கடைகள் மற்றும் குத்தகை இனங்களுக்கு ஏலம் கோரி ஒப்படைக்கவும் , மேல்நடவடிகைக்கும் மன்றத்தின் வழிகாட்டுதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3795/2022/அ1



Scanned with OKEN Scanner

**பொருள் எண்.22**

பூவிருந்தவல்லி நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் டிவி மூலம் விளம்பரம் செய்யும் குத்தகை உரிமத்தினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விடுவதற்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகைகள் நிர்ணயம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இன விபரம் | செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (ரூ) | வட்டாட்சியரிடம் பெறப்பட்ட சொத்து மதிப்புச்சான்று (01.01.2022 க்கு பிறகு) மற்றும் நாளது தேதியிலான வில்லங்க சான்று (ரூ) | சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | அண்ணா பேருந்து நிலையத்தில் டிவி மூலம் விளம்பரம் செய்தலுக்கு குத்தகை உரிமம் | 1,00,000/- | 10,00,000/- | 15,000/- |

**அலுவலக குறிப்பு**

அ) அனுமதி அளிக்கலாம்

ஆ) மன்றத்தின் ஒப்புதலை எதிர் நோக்கி மேற்சொன்ன டெபாசிட் விவரங்களின்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2555 /2023 /அ1

**பொருள் எண்.23**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக கடை எண்கள் 01, 02, 05, 08, 11, 13, 17. 33 மற்றும் 35 ஆகியவற்றிற்கு 28.04.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டது.

இவற்றில் பேருந்து நிலைய வணிக வளாக கடை எண்.33க்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. பின்னர் நடைபெற்ற பொது ஏலத்தில் வைப்புத் தொகை செலுத்திய கீழ் குறிப்பிட்டுள்ள இரு நபர்கள் கலந்து கொண்டனர்.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | திரு. யு. கோபி<br>பிளாட் எண்.38, அம்பாள் நகர் பேஸ்–1<br>குயின்விக்டோரியா சாலை<br>பூவிருந்தவல்லி | ரூ. 10,580/– |
| 2 | திரு. எஸ்.சத்தியநாராயணன்<br>எண்.3, கருணாகரன் நகர்<br>கீழ்மா நகர்,<br>பூவிருந்தவல்லி | ரூ. 10,550/– |



Scanned with OKEN Scanner

மேற்படி இரு நபர்களில் திரு. யு. கோபி, 12என்பவர் ஒரு மாதத்திற்கு உச்ச வாடகை ஏலக் கேள்வியாக ரூ.10,580/– கேட்டுகொண்டுள்ளார் ஆகவே திரு. யு. கோபி அவர்களால் கேட்கப்பட்ட உச்ச ஏலக் கேள்வி தொகையினை ஏற்றும் குத்தகையை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

பேருந்து நிலைய கடை எண். 33–க்கு நடைபெற்ற பொது ஏலத்தில் திரு. யு. கோபி, என்பவரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ள உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.10,580/– ஏற்கனவே இருந்த மாத ஃவாடகை மதிப்பை விட கூடுதலாக உள்ளது. மேற்படிய உச்ச கேள்வித் தொகையினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.3995/2022/அ1)

<u>பொருள் எண்.24</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காட்டுப்பாக்கம் கிராமம் புல எண்.242 & 246/1 ல் நீர்நிலை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்ததாக திரு.C.M.மோகன் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.2406/2018 படி வழக்கு தொடரப்பட்டதில் இந்நகராட்சி சார்பாக நடத்திய திரு.P.குருநாதன் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்காடு கட்டணம் ரூ.25,000/–னை இந்நகராட்சியின் பொதுநிதியில் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1199/2023/எப்1)

<u>பொருள் எண்.25</u>

பூவிருந்தவல்லி நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டப் பணிகள் மற்றும் பொதுநிதி பணிகளில் ஒப்பந்ததாரர்களின் பட்டியல் தொகையில் இருந்து பிடித்தம் செய்யப்படும் 2% GST தொகை மாதந்தோறும் ஆன்லைன் வழியாக தனியார் நிறுவனத்தின் மூலம் செலுத்தப்பட்டு வருகிறது. அதன்படி மார்ச் 2023 முதல் ஏப்ரல் 2023 வரை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட 2% GST தொகையினை தனியார் நிறுவனமான ஸ்ரீஹரி கன்ஸல்டன்ட்ஸ் நிறுவனத்தின் மூலம் மாதந்தோறும் செலுத்தியமைக்கு Tax Deductor–க்கு ரூ.3,000/– மற்றும் Tax Payer–க்கு ரூ.3,000/– வீதம் மார்ச் 2023 மாதத்திற்கு ரூ.6,000/–ம், ஏப்ரல் 2023 மாதத்திற்கு ரூ.6,000/–ம் ஆகமொத்தம் ரூ.12,000/–ம், மேலும், ஜனவரி 2023 முதல் மார்ச் 2023 வரை வருமான வரி (நான்காவது காலாண்டு) E-Filing செய்தமைக்கு ரூ.6,000/–ம் ஆகமொத்தம் ரூ.18,000/– வழங்கக்கோரி பார்வையில் கண்டுள்ளவாறு ஸ்ரீஹரி கன்ஸல்டன்ட்ஸ் நிறுவனத்தால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, இந்நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று GST ஆன்லைன் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

எனவே, மார்ச் 2023 முதல் ஏப்ரல் 2023 வரையிலான காலத்திற்கு ஆன்லைனில் பதிவேற்றம் செய்தமைக்கான தொகை ரூ.18,000/–னை எம்/எஸ். ஸ்ரீஹரி கன்ஸல்டன்ட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கிடவும், இதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதி வழங்கலாம்.

<u>ந.க. எண்.4129/2021/பி3</u>



Scanned with OKEN Scanner

பொருள் எண்.26

பூவிருந்தவல்லி நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளான பாரிவாக்கம்–1, பாரிவாக்கம்–2 (RRC), சுந்தர் நகர், அம்மா நகர், வி.ஏ.ஓ. அலுவலகம் மற்றும் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் உள்ள பசுமை உரக்குடில்களில் இருக்கும் பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு தோராய செலவின தொகை ரூ.9.80 இலட்சத்தினை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிக்கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க. எண். /2023/எச்1

பொருள் எண்.27

பூவிருந்தவல்லி நகராட்சியின் வார்டு எண்.19 செட்டி குறுக்கு தெருவில் புதியதாக மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலக குறிப்பு:-

1. மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 557/2022/இ1)

பொருள் எண்.28

பூவிருந்தவல்லி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள கீழ்கண்டுள்ள வாகனங்களுக்கு சாலை வரி, ஆயுள் காப்பீடு தொகை மற்றும் பழுதுகள் ஆகியவை 2023 – 24 ம் ஆண்டிற்கு மேற்கொள்ள தோராய செலவின தொகை ரூ.9.90 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகனம் விவரம் | வாகனம் எண் | ஆயுள் காப்பிடு முடிவடையும் நாள் |
|---|---|---|---|
| 1 | TATA ACE | TN 12 AB 9897 | 22.06.2023 |
| 2 | TATA ACE | TN 12 AB 9810 | 22.06.2023 |
| 3 | TATA ACE | TN 12 AB 9855 | 22.06.2023 |
| 4 | TATA ACE | TN 12 AB 9852 | 22.06.2023 |
| 5 | TATA ACE | TN 12 AB 9871 | 22.06.2023 |
| 6 | Compactor | TN 20 CV 1519 | 23.06.2023 |
| 7 | Compactor | TN 20 CV 1458 | 23.06.2023 |
| 8 | Bopcot | TN 12 AE 2263 | 23.06.2023 |
| 9 | TATA ACE | TN 12 B 0032 | 23.06.2023 |
| 10 | Sullage Lorry (Green) | TN 20 CW 6391 | 23.06.2023 |
| 11 | Tipper Lorry Cargo (Blue) | TN 20 J 4848 | 23.06.2023 |
| 12 | TATA ACE Fogging Vehicle | TN 12 E-1276 | 23.06.2023 |



Scanned with OKEN Scanner

| | | | |
|---|---|---|---|
| 13 | Tractor | TN 12 AK 6401 | 29.09.2023 |
| 14 | Sullage Lorry (Yellow) | TN 20 AA 4082 | 30.09.2023 |
| 15 | TATA ACE | TN 12 X 0086 | 03.01.2024 |
| 16 | TATA ACE | TN 12 X 0166 | 03.01.2024 |
| 17 | TATA ACE | TN 12 X 0122 | 03.01.2024 |

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1173/2023/எச்1

பொருள் எண்.29

பூவிருந்தவல்லி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் பொதுசுகாதார தளவாடப் பொருட்களான நீர்த்த சுண்ணாம்பு, பிளிச்சிங் பவுடர், பினாயில், ஆசிட், மலார், பிக்காஸ், கட்டை பிரஷ், மண்தகடு, குப்பை அள்ளும் தகடு, சம்மட்டி, இரும்பு பக்கெட், வாக்கருவாள், கிருமி நாசினிகள் மற்றும் இதர தளவாடப்பொருட்கள் 2023 -24 ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று வாங்கிட தோராய செலவின தொகை ரூ.9.80 இலட்சத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1058/2023/எச்1)

S. [signature] 26/May/...

நகரமன்ற தலைவர்

பூவிருந்தவல்லி நகராட்சி

Scanned with OKEN Scanner